துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை நேற்று (27.5.2025) தலைமைச் செயலகத்தில் அகில இந்திய கால்பந்து கூட்டமைப்பின் தலைவர் கல்யாண் சௌபே மற்றும் துணைத் தலைவர் என்.எ.ஹரிஸ் ஆகியோர் சந்தித்து தமிழ்நாட்டில் கால்பந்து விளையாட்டினை இளைஞர்களிடம் அதிக அளவில் கொண்டு செல்வது குறித்து கலந்துரையாடினார்கள். இந்நிகழ்வில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் பிரதீப் யாதவ் மற்றும் அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

கோயம்புத்தூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் கிணத்துக்கடவு சட்டமன்றத் தொகுதி, மதுக்கரை வட்டம் பிச்சனூர் பகுதியில் பருவ மழையால் வீடு இடிந்து விழுந்ததில் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருபவர்களை வீட்டு வசதித் துறை அமைச்சர் சு.முத்துசாமி நேரில் பார்வையிட்டு நலம் விசாரித்தார். அருகில் மாவட்ட ஆட்சித் தலைவர் பவன்குமார் க.கிரியப்பனவர், கோவை மாநகர் மாவட்டச் செயலாளர், சிங்காநல்லூர் சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் நா.கார்த்திக், கோவை தெற்கு மாவட்டச் செயலாளர் தளபதி முருகேசன், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் மரு.கார்த்திகேயன், மாநகராட்சி மாநகராட்சி ஆணையாளர் மா.சிவகுரு பிரபாகரன், கூடுதல் ஆட்சியர் வளர்ச்சி சங்கேத் பல்வந்த் வாகே, மாவட்ட வருவாய் அலுவலர் டாக்டர்.மோ.ஷர்மிளா ஆகியோர் உள்ளனர்.

ஜூன் 11–ஆம் தேதியன்று

சேலம் வருகை தரும் முதல்வருக்கு பிரம்மாண்ட வரவேற்பு!

அமைச்சர் எ.வ.வேலு தலைமையில் நடைபெற்ற ஒருங்கிணைந்த சேலம் மாவட்டக் கழகக் கூட்டத்தில் தீர்மானம்!

சேலம், மே 28 -

சேலம் ஒருங்கிணைந்த மாவட்ட திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொது உறுப்பினர்கள் கூட்டம் 26.05.2025 - திங்கட்கிழமை சேலம், 5 ரோட்டில் உள்ள கே.எம்.பி. திருமண மண்டபத்தில் பொதுப்பணித்துறை அமைச்சர், கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர் எ.வ.வேலு தலைமையிலும், சுற்றுலாத்துறை அமைச்சர், சேலம் மத்திய மாவட்டக் கழகச் செயலாளர் இரா.இராஜேந்திரன், சேலம் நாடாளுமன்ற உறுப்பினர், சேலம் மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் டி.எம்செல்வகணபதி மற்றும் சேலம் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர் எஸ்.ஆர். சிவலிங்கம் ஆகியோர் முன்னிலையிலும் நடைபெற்றது.

மாவட்டக் கழக நிர்வாகிகள், மாநகர, நகர, ஒன்றிய, பகுதி. பேரூர்ச் செயலாளர்கள், நிர்வாகிகள், முன்னாள், இந்நாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைக் கழகச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாவட்ட பிரதிநிதிகள், துணை அமைப்புகளான அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள் மற்றும் கழக முன்னோடிகள் உள்ளிட்டோர் பங்கேற்ற இக்கூட்டத்தில் நிறைவேற்றப் பட்ட தீர்மானங்கள் வருமாறு:-

முதல்வருக்கு பிரம்மாண்ட வரவேற்பு!

எத்தனை, எத்தனை எதிரிகள் முளைத்தாலும், எத்தனை, எத்தனை இன்னல்கள் விளைத்தாலும், அத்தனையையும் தூளாக்கி விட்டு, பேரறிஞர் அண்ணாவை போல் அமைதி காத்திடும் நம் உயிரினும் மேலான "கழகத் தலைவர்" அவர்கள் எக்கணமும், எப்பொழுதும் இத்த தமிழகத்தின் மக்களையே அவர் நெஞ்சம் நினைத்திருக்க, தமிழக மக்களில் ஒருவராகவும், நம்மில் ஒருவராகவும் நம் முதல்வர் திகழ்கிறார்.

பேரறிஞர் அண்ணா அன்றே சொன்னார் இந்தியா என்பது ஒரு நாடு அன்று, இது ஒரு துணைக்கண்டம் என்று, அதை இன்று அகில இந்தியாவுக்கும் எடுத்துச் செல்கிறார் நம் போற்றுதலுக்குரிய கழகத் தலைவர் அவர்கள். கழகத் தலைவர் அவர்களால் மற்ற மாநில மக்களும் இன்று விழிப் புணர்வு பெறுகின்றனர்.

மாநிலங்கள் தம் உரிமைகளைப் பெறவும், கூட்டாட்சி குடியரசு மலரவும் அவர் எழுப்பிடும் குரல் நாடு முழுவதும் எதிரொலிக்கிறது. அத்தகைய பெருமைமிகு தலைவர், மக்களின் முதல்வர் அவர்கள் நம் சேலம் மாவட்டத்திற்கு 11.06.2025 புதன்கிழமை வருகை தர உள்ளார்கள். அவர் வருகை நம் மண்ணுக்கு பெருமை, அவரை சேலம் விமான நிலையம் முதல் மேட்டூர் வரை சேலம் மத்திய மாவட்டக் கழகமும், சேலம் மேற்கு மாவட்டக் கழகமும் இணைந்து "படை பெருத்ததால் பார் சிறுத்ததோ" என்று மாற்றாரும் வியக்கும் வண்ணம் பிரம்மாண்டமாக அலைகடலென ஆர்ப்பரித்து கழகத் தோழர்களும், பொதுமக்களும் சிறப்பான வரவேற்பளிப்பது என்றும், அதுபோல் சேலம் கிழக்கு மாவட்ட கழக தோழர்களும், சேலம் சேகோசர்வ் தொடங்கி சேலம் அரசு மருத்துவ கல்லூரி வரை பிரம்மாண்ட வரவேற்பு அளிக்க வேண்டுமென்றும்,

அனைத்து நிகழ்ச்சிகளிலும் சேலம் மத்திய, கிழக்கு, மேற்கு மாவட்டக் கழக, ஒன்றிய, நகர, பேரூர், பகுதி, வட்டக் கழக நிர்வாகிகள், ஊராட்சி கிளைக் கழக நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், இளைஞரணி, தகவல் தொழில் நுட்ப அணி, மாணவர் அணி, மகளிர் அணி, அமைப்பு சாரா ஓட்டுநர் அணி, அயலக அணி, ஆதிதிராவிடர் நலக்குழு, இலக்கிய அணி, கலை, இலக்கிய பகுத்தறிவுப்பேரவை, சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு, சுற்றுச்சூழல் அணி, தொண்டர் அணி, தொழிலாளர் அணி, நெசவாளர் அணி, பொறியாளர் அணி, மகளிர் தொண்டர் அணி, மருத்துவ அணி, மீனவர் அணி, வர்த்தக அணி, வழக்கறிஞர் அணி, விவசாய அணி, விவசாயத் தொழிலாளர் அணி, விளையாட்டு மேம்பாட்டு அணி ஆகிய அணிகளின் மாவட்ட, மாநகர, ஒன்றிய, பகுதி, பேரூர் அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் என அனைத்து அணிகளிலும் உள்ள தோழர்கள் ஒருங்கிணைந்து சிறப்பிப்பது என்றும் தீர்மானிக்கப் படுகிறது.

கலைஞர் பிறந்தநாள் கோலாகலமான கொண்டாட்டம்!

"கலைஞர்" தமிழகம் கண்ட நான்கெழுத்து மந்திரம்! தமிழ் மக்களின் உயிர்த் துடிப்பு! இந்தியா கண்ட அரசியல் அதிசயம்! "உடன் பிறப்பு" என்ற ஒற்றை சொல்லால் சாதி, இனம், மதம், மொழி என்ற பேதங்களை ஒழித்த நல்ல உறவு கண்ட தலைவர்! பேச்சால், எழுத்தால், உரையாடல் வீச்சால் உள்ளங்கவர்ந்த அறிவாற்றல்! நின்ற தேர்தல்களில் வெற்றி வாகை சூடிய தலைவர்! தன்னலமற்ற தலைமைப் பண்பு! 5 முறை ஆட்சிப் பொறுப்பில் இருந்த போதெல்லாம் தீட்டிய பல்வேறு திட்டங்களில் வாழுகின்ற பெருமை! மனிதநேயம் காத்திட்ட மகத்தான பண்பு! தூய்மையும் வாய்மையும் நிரம்பிய நெஞ்சுரம்! "வாருங்கள் எல்லோரும் மொழிப்போருக்கு சென்றிடுவோம் வந்திருக்கும் இந்திப் பேயை விரட்டியடிப் போம்" என்று அரைக்கூவல் விடுத்த மொழி உணர்வு!

தலைவன் இட்ட கட்டளையை நிறைவேற்ற தண்டவாளத்தில் தலைவைக்கத் தயங்காத வீரம்! எண்பது ஆண்டு பொதுவாழ்வின் சாதனைகளால் மறைந்த பின்னரும் வாழுகின்ற மகத்துவம்! முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் தன்னுடைய 14வது வயதில் பொதுவாழ்வில் தன்னை ஒப்படைத்துக் கொண்டு திராவிட கொள்கையை ஏற்று கொண்டவராய், பெரியாரின் சீடராக, பேரறிஞர் அண்ணா அவர்களின் தம்பியாய் திராவிட முன்னேற்றக் கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டு தமிழர்களின் உரிமைக்காக, சுயமரியாதை சிந்தனையோடு தமிழ் மொழிக்கு செம்மொழி அந்தஸ்து, மாநில சுயாட்சி, சமூக நீதி, சமத்துவம், பெண்ணுரிமை ஆகியவைகளைக் காத்திட அடித்தட்டு மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தி சமூகத்தில் பின்தங்கிய வர்கள், மாற்றுத்திறனாளிகள், சமூகத்தால் ஒடுக்கப்பட்ட மூன்றாம் பாலினத்தவர்கள் அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தி, அனைவரையும் பாதுகாக்கும் பாது காவலராக இயக்கத்தின் கருவாக விளங்கிய முத்தமி ழறிஞர் கலைஞர் அவர்களின் ஜூன் 3ம் நாள் 102 வது பிறந்த நாள் விழாவினை சேலம் ஒருங்கிணைந்த மாவட்ட திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக மிக எழுச்சியுடன் தலைவர் அவர்களின் பிறந்தநாள் விழா கொண்டாடப்பட வேண்டுமெனவும்,

அதுனையொட்டி சேலம் ஒருங்கிணைந்த மாவட்ட, மாநகர, நகர, ஒன்றிய, பகுதி, பேரூர், வார்டு, கிளை கழகங்கள் சார்பாகவும், ஊராட்சிகள் சார்பாகவும், என்றென்றும் நம்முடன் வாழுகின்ற கலைஞர் அவர்களின் பிறந்தநாள் விழா மிகவும் கோலாகலமாக கொண்டாடப்பட வேண்டு மெனவும், தோரணங்கள் அமைத்து,

ஏழை எளியவர்களுக்கு நலத்திட்ட உதவிகள், மருத்துவ முகாம்கள், மாணவர்களுக்கு விளையாட்டுப் போட்டிகள், மரக்கன்றுகள் நடுதல் என அனைத்து நிகழ்ச்சிகளையும் எழுச்சியோடு ஏற்பாடு செய்ய வேண்டும் என கேட்டுக் கொள்வதோடு ஒன்றிய, நகர, பேரூர், பகுதி, வட்டக் கழக நிர்வாகிகள், ஊராட்சி கிளைக் கழக நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், இளைஞர் அணி, தகவல் தொழில்நுட்ப அணி, மாணவர் அணி, மகளிர் அணி, அமைப்புசாரா ஓட்டுநர் அணி, அயலக அணி, ஆதிதிராவிடர் நலக்குழு, இலக்கிய அணி, கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவை, சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு, சுற்றுச்சூழல் அணி, தொண்டர் அணி, தொழிலாளர் அணி, நெசவாளர் அணி, பொறியாளர் அணி, மகளிர் தொண்டர் அணி, மருத்துவ அணி, மீனவர் அணி, வர்த்தக அணி, வழக்கறிஞர் அணி, விவசாய அணி, விவசாய தொழிலாளர் அணி, விளையாட்டு மேம்பாட்டு அணி ஆகிய அணிகளின் மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் என அனைத்து நிர்வாகிகளையும், கழகத் தோழர்களையும் இந்த நிகழ்ச்சிகளை எழுச்சியோடு, உணர்வுபூர்வமாக சிறப்பாக கொண்டாட வேண்டும் என சேலம் மத்திய, சேலம் கிழக்கு, சேலம் மேற்கு மாவட்ட தி.மு.க. கேட்டுக்கொள்கிறது.

இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

காஞ்சிபுரம் மாவட்டம் வாலாஜாபாத் வடக்கு ஒன்றியம் கோவிந்தவாடி ஊராட்சியில் ரூபாய் 6.87 கோடியில் அரசு மேல்நிலைப்பள்ளி புதிய கட்டிடம் கட்டுவதற்கான பணியை கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் ஆர்.காந்தி அடிக்கல் நாட்டினார். இந்நிகழ்வில் காஞ்சிபுரம் சட்டமன்ற உறுப்பினர் சி.வி.எம்.பி.எழிலரசன் எம்.எல்.ஏ., காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் திருமதி கலைசெல்வி மோகன், ஒன்றிய கழக செயலாளர் படுநெல்லி பி.எம்.பாபு மற்றும் ஒன்றிய கழக நிர்வாகிகள் மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

ஜூன் 2 – பள்ளிகள் திறப்பு!

பள்ளிக் கல்வி உயர் அலுவலர்களுடன் ஆலோசனை!

அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி காணொலி வாயிலாக மேற்கொண்டார்!

சென்னை, மே 28-

பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தலைமையில் முதன்மை கல்வி அலுவலர்கள் ஆலோசனைக் கூட்டம் காணொளி காட்சி வாயிலாக நடைபெற்றது.

அரசு முதன்மைச் செயலாளர், துறைசார் இயக்குநர்கள் மற்றும் மாவட்டக் கல்வி அலுவலர்களுடன் காணொலி வாயிலாக கலந்துரையாடினார்.

கோடை விடுமுறைக்குப் பிறகு ஜூன் 2ஆம் தேதி பள்ளிகள் திறக்கப்படவுள்ளது. இதனை முன்னிட்டு பள்ளிகளில் செய்யப்பட வேண்டிய முன்னேற்பாடுகள் குறித்தான பல்வேறு ஆலோசனைகளை வழங்கினார். இடைநிற்றலைக் கண்காணித்து, இடைநிற்றல் இருப்பின் அம்மாணவர்களை மீண்டும் பள்ளிக்கு அழைத்து வர வேண்டும். மாணவர்கள் வருகைக்கு முன்னர் பள்ளி வளாகத்தைத் தூய்மையாக வைத்திருக்க வேண்டும். இக்கல்வியாண்டில் கல்வி அலுவலர்கள் அதிகமான ஆய்வுகளை மேற்கொள்ள வேண்டும்.

முந்தைய கல்வியாண்டை விட, இக்கல்வியாண்டில் அதிகப்படியான தேர்ச்சி விகிதத்தைப் பெற முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும். பள்ளிக் கட்டடங்களின் உறுதித் தன்மையை பரிசோதிக்க வேண்டும். உடனடித் தேர்வு எழுதும் மாணவர்களுக்கு வழிகாட்ட வேண்டும்.

மாணவர்களுக்கான நன்னெறி வகுப்புகளை நடத்த வேண்டும். மாணவர்களின் பாதுகாப்பையும், சுகாதாரத்தையும் உறுதி செய்திட வேண்டும். உடற்கல்வி பாடவேளையை முறையாக பின்பற்றி சாதனையாளர்களை உருவாக்க வேண்டும்.

மாணவச் செல்வங்களை அன்போடு வரவேற்க வேண்டுமென ஆலோசனைகளை வழங்கினார்.

கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாளையொட்டி

அன்னம் தரும் அமுதகரம் 97வது நாள்!

திரு.வி.க. நகர் தெற்கு பகுதியில் அமைச்சர் பி.கே. சேகர்பாபு உணவு வழங்கினார்!

சென்னை, மே.28-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு காலை உணவு வழங்கும் சிறப்புமிகு "அன்னம் தரும் அமுதக்கரங்கள்" மாபெரும் திட்டத்தின் 97 ஆம் நாளான - கழகத்தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இனிய பிறந்தநாளை முன்னிட்டு நேற்று (27.5.2025) திரு.வி.க நகர் தெற்கு பகுதி: 1) வட்டம் 76 - செல்லப்பா தெரு ஸ்டாரன்ஸ் ரோடு ஓட்டேரி இந்தியன் வங்கி எதிரில். 2) வட்டம் 76அ - கோவிந்தபுரம் பட்டாளம் ஆஞ்சநேயர் கோயில் அருகில், சென்னை ஆகிய பகுதிகளில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் "தமிழ்நாட்டு நலன்களையும், எதிர்காலத்தையும் யாருக்காவும், எதற்காகவும் விட்டுத்தரமாட்டோம். தமிழ்நாட்டின் உரிமைகளுக்காக ஒன்றுபட்டு போராடுவோம். தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும் - இதுதான் ஒரே இலக்கு!" என்ற உறுதிமொழியை ஏற்று பொதுமக்களுக்கு காலை உணவு வழங்கினார்கள்.

இந்நிகழ்ச்சியில் பெருநகர சென்னை மேயர் பிரியா ராஜன், ப.தாயகம் கவி எம்.எல்.ஏ, எம்.சாமி கண்ணு, இசட்.ஆசாத், பி.ஜெ.துளசிங்கம், இரா. வீரமணி, நா.துலுக்கானம், எம்.பெரோஸ்கான், கா.ராஜ்முகமது, எஸ். தமிழ்செல்வி, எஸ்.சசிகுமார், டி.சுரேஷ்குமார் (எ) பொல்லு சுரேஷ், எம். தமிம், எஸ்.வெங்கடேசன், வி.க.வெங்கடேசன். இத்திட்ட ஒருங்கிணைப்பாளர்கள்: சொ.வேலு, எஸ்.முரளி, பெரம்பூர். ஆர்.ராஜன், கே.ஆர்.அபரஞ்சி, அசோக் ஜெயின், பி.விஜயகுமார், ம.அசோக்குமார், எல்.சம்பத்குமார், க.பா.பிரதீப்குமார், மற்றும் கழக நிர்வாகிகள் முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

பெரம்பூர் உதயசூரியன் நகரில் தீ விபத்து

பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு நிவாரண உதவி!

ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ. வழங்கினார் !

சென்னை, மே 28-

பெரம்பூர் சட்டமன்ற தொகுதி வார்டு-37 உதயசூரியன் நகர் பின்புறம் உள்ள குடிசைகளில் 26-05-2025 மாலை தீப்பிடித்து எரிந்த தகவல் அறிந்தவுடன் சென்னை வடக்கு மாவட்ட பொறுப்பாளர் பெரம்பூர் சட்டமன்ற உறுப்பினர் ஆர்.டி.சேகர் அவர்கள் நேரில் சென்று பார்வையிட்டு உடனடியாக மீட்பு நடவடிக்கை மேற்கொண்டார்.

மேலும், பாதிக்கப்பட்ட பொதுமக்களுக்கு தங்குமிடம், உணவு மற்றும் மருத்துவ முகாம் ஏற்பாடு செய்து வருவாய் துறை மூலம் கணக்கெடுக்கும் பணி நடந்து முடிந்ததை தொடர்ந்து 27-05-2025 காலை வருவாய் துறை, உணவு பொருள் வழங்கல் துறை, சென்னை மாநகராட்சி மற்றும் காவல் துறை அதிகாரிகளை வரவழைத்து தீயில் எரிந்த சான்றிதழ்கள் பெறுவதற்கு நடைபெற்ற சிறப்பு முகாமை பார்வையிட்டு பாதிக்கப்பட்ட குடும்பத்தினர்களை நேரில் சந்தித்து நிவாரண உதவியாக ரொக்கம் ரூ.5000/- மற்றும் அரிசி 10 கிலோ, போர்வை, துண்டு, பாய், புடவை, லுங்கி, பக்கெட், மக்(MUG) உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்களை சென்னை வடக்கு மாவட்ட பொறுப்பாளர் பெரம்பூர் சட்டமன்ற உறுப்பினர் ஆர்.டி.சேகர் வழங்கினார்.

அதுபோது, பகுதி செயலாளர் அ. முருகன், மாவட்ட துணை செயலாளர் எஸ்.ஆர். கமலக்கண்ணன், வட்ட செயலாளர் கே.இ. செந்தமிழரசு, வி.முருகன், சி.எஸ்.ரவி, பகுதி அவைத் தலைவர் ஏ. ஜியா, மாவட்ட துணை அமைப்பாளர்கள் வை. கௌவுதம், பிரசிடென்சி சி.சதீஷ், தேவ அன்பு, மாவட்ட பிரதிநிதி அருண் சக்கிரவர்த்தி, மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

லண்டன் ஹைகேட்டில் அமைந்துள்ள பொருளாதார அறிஞரும், வரலாற்றாசிரியரும், சமூகவியலாளரும், அரசியல் கோட்பாட்டாளரும், பத்திரிகையாளரும், அரசியல் பொருளாதாரத் திறனாய்வாளரும், சோசலிசப் புரட்சியாளருமான கார்ல் மார்க்ஸ் அவர்களின் கல்லறை அமைந்திருக்கும் இடத்திற்கு தமிழ்நாடு அரசின் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் சென்று அன்னாரது சிலைக்கு மரியாதை செலுத்தினார் உடன் லண்டன் திமுக அயலக அணி அமைப்பாளர் செந்தில், மாநில சிறுபான்மையினர் அணி இணைச் செயலாளர் சி.ஜெரால்டு ஆகியோர் உள்ளனர்,